நாள்.10.10.2025

அசல் வழக்கு எண்.97/2022

வா. சா.1

பெயர்.

சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை

வழக்கு 2 ம் தபசில் சொத்தானது உயிலின் அடிப்படையில் எனக்கு முழுமையாக பாத்தியப்பட்டது என விளம்புகை பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 1989 ம் ஆண்டு கோபால கிருஷ்ணன் என்பவர் ஸ்ரீனிவாசக ராஜா என்பவரிடம் தான செட்டில்மெண்ட் மூலமாக பிராது தபசில் அயிட்டம் 2 ம் சொத்தில் பெற்றுள்ளார் என்றால் சரிதான். பிராது தபசில் 2 அயிட்ட சொத்தில் ஸ்ரீனிவாசக ராஜா என்பவரின் அனுபவத்திலும் பயன்பாட்டிலும் இருந்ததாக பிராதில் குறிப்பிட்டுள்ளேன் எந்த ஆண்டு வரை என்றால் 1994 ம் ஆண்டு வரை.

மேற்படி அனுபவத்தை காட்டுவதற்கு ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல. கோபால கிருஷ்ணன் மற்றும் அவரது மனைவிக்கு குழந்தைகள் கிடையாது என்றால் சரிதான். பிராது தபசில் அயிட்டம் 3 ல் குறிப்பிடப்பட்டுள்ள நகைகள், ஆவணங்கள் மற்றும் பொருட்கள் ராஜலெட்சுமி என்பவருக்கு கோபால கிருஷ்ணன் கொடுத்ததாக பிராதில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

கோபால கிருஷ்ணன் என்பவர் ராஜலெட்சுமியை குழந்தை இல்லாத காரணத்தினால் பாரமரிய முறையில் தத்து எடுத்தார் என்றால் சரியல்ல. ராஜலெட்சுமியின் ரேஷன் கார்டில் தந்தை பெயர் கோபால கிருஷ்ணன் என்றுள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. கோபால கிருஷ்ணன் வங்கி கணக்குகளில் நாமினியாக எனது பெயரை கொடுத்துள்ளாரா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள உயில் எங்கு வைத்து எப்பொழுது தயார் செய்யப்பட்டது என்றால் 21.06.2018 தேதியில் தயார் செய்யப்பட்டது எந்த இடம் என்று தெரியாது.

மேற்படி உயிலை யார் எழுதினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. மேற்படி உயில் ஏற்படும் நேரத்தில் நான் உடன் இருந்தேனா என்றால் இல்லை. மேற்படி உயிலில் சாட்சி கையொப்பம் செய்தவர்கள் கோபால கிருஷ்ணனுக்கு என்ன உறவு என்றால் நெருங்கிய உறவினர்கள் 10

ஆண்டுகாலமாக சென்னையில் தான் வசித்து வந்தார்கள். மேற்படி சாட்சி கையொப்பம் இட்ட நபர்கள் எனக்கு என்ன உறவு என்றால் அண்ணன் மற்றும் அண்ணி ஆவார்கள். நான் தாக்கல் செய்துள்ள உயில் பதிவு செய்யப்படாதது என்றால் சரிதான். உயில் எழுதும் சமயத்தில் கோபால கிருஷ்ணன் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டு இருந்தார் என்றால் சரிதான்.

மேற்படி காலத்தில் அவர் தொடர் மருத்துவ சிகிட்சையில் இருந்தார் என்றால் சரிதான். 2018 உயில் எழுதும் காலத்தில் கோபால கிருஷ்ணன் விழிப்புடன் இருந்தார் என்பதற்கு ஆவணம் எதுவும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை ஆனால் அவர் மருத்துவ சிகிச்சை பெற்று ஆரோக்கியமாக தான் இருந்தார். உயில் எழுதுவதற்கு முன் அவர் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டாரா என்றால் இல்லை, மருத்துவமனை சென்று சிகிச்சை பெற்று வந்தார்.

அவர் இறந்த தேதி தெரியுமா என்றால் 13.07.2018 ஆகும். கோபால கிருஷ்ணனின் இறுதி சடங்கை யார் செய்தார்கள் என்றால் நானும் எனது அக்கா ராஜலெட்சுமியும் செய்தோம். கோபால கிருஷ்ணன் அடக்கம் செய்த ரசீது எதுவும் வழக்கில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை , ராஜா என்பவர் அடக்கம் செய்தார். உயில் என் கைவசம் எப்படி வந்தது என்றால் நானும் என் அக்கா ராஜேலெட்சுமியும் கோபால கிருஷ்ணனின் வீட்டில் சென்று எடுத்தோம். என் சகோதரி ராஜலெட்சுமி என் மீது 15.07.2019 புகார் மனு எண் 323/2019 என்ற புகார்அளித்தார் என்றால் சரிதான்.

மேற்படி புகார் வண்டி, ஆவணங்கள், FD லாக்கர் சாவி, மற்றும் இதர சான்றிதழ்கள் நான் எடுத்து சென்று விட்டதாக கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல பொய்யான புகார். எனக்கு உயில் கிடைத்த விவரத்தை எனது உறவினர்கள் யாருக்கும் நான் சொன்னேனா என்றால் சரிதான். யாரிடம் எப்பொழுது சொன்னேன் என்றால் எடுத்த சமயத்தில் தகவல் சொன்னேன். உயில் எடுத்து ஒரு ஆண்டு காலத்திலே சென்னை உயர்நீதிமன்றத்தில் பிரோபைட் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான்.

நான் உயிலை கோபால கிருஷ்ணன் வீட்டிலுள்ள பெட்டியில் இருந்து எடுத்த சமயத்தில் வேறு எதுவும் உயில் மேற்படி பெட்டியில் இருந்ததா என்றால் இல்லை. நான் கோபாலகிருஷ்ணனுடன் எந்த ஆண்டு எந்த இடத்தில் வசித்து வந்தேன் என்றால் நான் திருப்பூரில் தான் வசித்து வந்தேன் அவரை அடிக்கடி சென்று பார்ப்பேன். அவர் உயில் எழுதும் சமயத்தில் எங்கள் குடும்பத்தில் ஏதாவது பிரச்சனை இருந்தது என்றால் சரிதான், என் அக்காவும் கோபால கிருஷ்ணனுக்கும் பிரச்சனை இருந்தது.

நான் தாக்கல் செய்திருந்த உயிலில் அயிட்டம் 1 சொத்து திருநெல்வேலியும் அயிட்டம் 2 சென்னையிலும் உள்ளது என்றால்

சரிதான். நான் கேட்கும் சொத்து அயிட்டம் 2 குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சொத்து சென்னையில் இருக்கும் பொழுது கட்டாயமாக பிரோபைட் பெறவேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். இருவரும் முதலில் சம்மத்தித்து சரிபாதியாக பிரித்து கொள்ளலாம் என முடிவு செய்ததால் பிரோபைட் பெறவில்லை.

நான் தாக்கல் செய்த பிரோபைட் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த பிரோபைட் உயிலின் அடிப்படையில் தள்ளுபடி ஆகவில்லை என்றாலும் Jurisdiction அடிப்படையில் தள்ளுப்படி ஆனது என்றாலும் சரியல்ல, அது கொரனா பரவல் காரணமாக நான் மேற்படி பிரோபைட் நடவடிக்கைகளில் சரிவர பின்பற்றவில்லை. நான் மேற்படி பிரோபைட்டை உரிய நீதிமன்றத்தில் திரும்ப தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை, அயிட்டம் 1 சொத்து இந்த நீதிமன்ற வரம்பிற்குள் வருவதால் இந்த வழக்கை நடத்தி வருகிறேன்.

மேற்படி பிரோட்பைட்டிற்கு நான் மேல்முறையீடு எதுவும் செய்தேனா என்றால் இல்லை. 2 அயிட்ட சொத்து தற்போது என்னுடைய அனுபவத்தில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி 2 ம் அயிட்ட சொத்தில் என்னுடைய அனுபவத்தில் உள்ளதை காட்ட வருவாய் ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். கோபால கிருஷ்ணன் இறப்புக்கு பிறகு அவரது வளர்ப்பு மகளாக பிரதிவாதி ராஜலெட்சுமி தான் தபசில் சொத்துக்களை பராமரித்து வருகிறார் என்றாலும் நான் வழக்கிற்காக பொய் சொல்லுகிறேன் என்றாலும்சரியல்ல, ராஜலெட்சுமி கோபால கிருஷ்ணனின் வளர்ப்பு மகள் அல்ல.

தபசில் சொத்தை பொறுத்து வருவாய் துறை ஆவணங்களில் கோபால கிருஷ்ணனின் பெயர் தான் உள்ளது என்றால் சரிதான். நான் பிராதில் குறிப்பிட்டுள்ள அயிட்டம் 1,2,3 சொத்துக்களின் மதிப்பு 1.5 கோடி இருக்குமா என்றால் இருக்கும். மேற்படி மதிப்பை உறுதிப்படுத்தும் வகையில் துணை பதிவாளர் மதிப்பீட்டு சான்றிதழ் வழக்கில் தாக்கல் செய்தேனா என்றால் செய்யவில்லை. என்னுடைய பிராதில் அயிட்டம் 1,2,3 சொத்துகளின் மதிப்பை தனித்தனியாக குறிப்பிட்டவில்லை என்றால் சரிதான். அயிட்டம் 2 சொத்து குடியிருப்பு சொத்து என்றால் சரிதான், அருகில் உள்ள டவர் இருக்கும் இடம் வாடகைக்கு விடப்பட்டுள்ளது.

நான் தாக்கல் செய்த பிராதில் அசையும் மற்றும் அசையா சொத்துக்களின் மதிப்புகளை தனித்தனியாக குறிப்பிட்டு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் தபசில் சொத்துக்களின் மதிப்புகளை பொறுத்து சரியான நீதிமன்ற முத்திரை கட்டணம் செலுத்ததாக காரணத்தில் வழக்கு பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியது

அல்ல என்றால் சரியல்ல. எனது சகோதரி ராஜலெட்சுமி பல்லாவரம் நீதிமன்றத்தில் கோபால கிருஷ்ணன் என்பவரின் வாரிசு என விளம்புகை கோரி தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான், ஆனால் ராஜலெட்சுமி கோபால கிருஷ்ணனின் வளர்ப்பு மகள் அல்ல.

திருப்பூர் நீதிமன்றத்தில் கோபால கிருஷ்ணனின் 2 ம் நிலை வாரிசுகள் நானும் ராஜலெட்சுமியும் என நான் வழக்கு தாக்கல் செய்து பெற்ற தீர்ப்பாணை செல்லாது என ராஜலெட்சுமி வழக்கு எண் 154/2021 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான், அது பொய்யான வழக்கு. மேற்படி வழக்கு தற்போது நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். கோபாலகிருஷ்ணனின் அனைத்து சொத்துக்களுக்கும் ராஜலெட்சுமி தான் வாரிசு என்றாலும் நான் கேட்கும் பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்றாலும் சரியல்ல.

கோபால கிருஷ்ணன் 2 அயிட்ட சொத்தை தான செட்டில்மெண்ட் பெற்ற காலத்திலிருந்து இறக்கும் வரை அவர் அனுபவத்தில் வைத்திருந்து தற்போது ராஜலெட்சுமியின் அனுபவத்தில் தான் மேற்படி சொத்து உள்ளது என்றால் சரியல்ல. கோபாலகிருஷ்ணன் ராஜலெட்சுமியை பாரமரிய முறையில் தத்து எடுத்ததால் ராஜலெட்சுமியின் பள்ளி சம்மந்தப்பட்ட ஆவணங்களில் அவர் கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரியல்ல, தத்து எடுக்கவில்லை.

கோபால கிருஷ்ணனின் வளர்ப்பு மகளான பிரதிவாதி ராஜலெட்சுமி தான் அயிட்டம் 2,3 சொத்துகளுக்கு முழு உரிமையாளர் என்றாலும் உயில் எனக்கு தெரிந்த நபர்களால் மோசடியாக ஏற்படுத்தப்பட்டு கோபால கிருஷ்ணனின் கையொப்பம் பெறப்பட்டு ஏற்படுத்தப்பட்டது என்றாலும் சரியல்ல. வழக்கு தள்ளுப்படி செய்யக்கூடியது என்றாலும் சரியல்ல.